DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**STC. No.65 /2020**

**Deposition of LW9 examined as PW8** 7 Dt. 08.07.2025

| | |
|---|---|
| Name | ராஜதுரை (Rtd SI of Police) |
| Father's/Husband's Name | அழகர் |
| Village | நெப்பத்தூர் |
| Taluk | |
| Age | 63/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 08.07.2025

(A1,A2 present. )

**முதல் விசாரணை**

நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். பாகசாலை காவல் நிலைய குற்ற எண்.37/2019 ஆக சிறப்பு உதவி ஆய்வாளர் சங்கர் என்பவரால் பதிவு செய்யப்பட்ட வழக்கை மேல் விசாரணை செய்யும் பொருட்டு என் பார்வைக்கு வைத்ததை நான் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கலைவாணன், மனோகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(பார்வை மகசர் அ.சா.ஆ.3 மற்றும் மாதிரிவரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பட்டியல் சாட்சிகள் முத்துகுமரன், செல்லதுரை, மாதவன், ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலத்தினை தனிதனியே பதிவு செய்தேன். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் குற்ற சம்பவம் உண்மை என தெரிய வந்ததில் எதிரிகளை தேடிய போது எதிரிகள் இருவரும் மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டபடியால் அவர்களை கைது செய்ய இயலவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1,2 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அருண்ராஜ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிந்து அவர் கொடுத்த காயச்சான்றுகளை பெற்றேன்.அ.சா.1 முத்துகுமரன் என்பவர் தொடர் சிகிச்சைக்கு ஒத்துழைப்பு அளிக்காததால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்க இயலாது என்று சான்று வழங்கியுள்ளார். அ.சா.2 க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியுள்ளார். **(விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ.5,6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகள் மீதான விசாரணையை முடித்து 26.02.2020 ம் தேதி இதச 294(b),323,506(1) ஆகிய சட்ட பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கையினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகார் பெறப்பட்டு ஆறு நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் நிலைய மனு எண் கொடுக்கப்பட்டு

விசாரணைக்கு பின் பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை காலம் 3b-ல் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம் 19.10.2019 நேரம் 16.00 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் ராமசாமி மகன் தென்னரசு என்பவர் எங்களை இருசக்கர வாகனத்தில் வைத்து மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தென்னரசை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 புகாரிலோ வாக்குமூலத்திலோ அ.சா.1-ன் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் பிடிக்காமல் பொறாமை கொண்டு எதிரிகள் தகராறு செய்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் தினத்தன்றே எதிரிகளை அ.சா.1 மற்றும் இதர நபர்கள் தாக்கி அதில் ஏற்பட்ட காயத்தால் எதிரிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள் என்றால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். அ.சா.1 மற்றும் இதர நபர்களுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். புகாரில் கட்டையால் அடித்ததாக குறிப்பிடப்பட்ட நிலையில் அவ்வாறான கட்டை ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1-க்கு ஏற்பட்ட காயம் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததால் ஏற்பட்டது என்றும் அதனை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளார் என்றாலும் சரியல்ல. பார்வை மகசர், வரைபடம் ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதி கொடுத்த பொய்யான புகாருக்கு எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை